2007 ஜனவரி 23]

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுகிய நாட்களில், ஓரிரு நாட்களில் அந்த Dean பதவியில் அலுவலர்களைப் போடுவதற்கு வேண்டிய முயற்சியை அரசாங்கம் எடுத்திருக்கிறது. அங்கே Dean போடுவதிலே பிரச்சினை என்னவென்றால், Clinical, Non–Clinical என்று சொல்லி, இரண்டு பிரிவு டாக்டர்களும் சண்டை போட்டுக்கொள்கிறார்கள். அதை ஓரளவிற்கு அதிகாரிகளை வைத்துப் பேசி முடித்திருக்கிறோம். அவர்களை அழைத்துப் பேசி முடிக்காமல்விட்டால், ஒவ்வொருவரும் கோர்ட்டுக்குப் போய், தடையாணை வாங்கிவிடுவார்கள். ஆகவே, அதையெல்லாம் பேசி முடித்துவிட்டோம். எனவே, குறுகிய காலத்திற்குள்ளாக அந்த Dean பதவி எல்லா இடங்களிலும் நிரப்பப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன். மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

16—

திருப்பணி

***8939—டாக்டர் க. நெடுஞ்செழியன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமத்தி வேலூர் காவிரிக்கரையிலுள்ள பழமைவாய்ந்த காசி விஸ்வநாதர் ஆலயத் திருப்பணியை நடத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பரமத்தி வேலூர் காவிரிக்கரையில் அமைந்துள்ள காசி விஸ்வநாதர் திருக்கோயிலுக்கான திருப்பணி வேலைகள் துவங்கப்பட்டு, மடைப்பள்ளியினைச் சீரமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. அருள்மிகு சுப்பிரமணியர், விநாயகர் மற்றும் சண்டிகேஸ்வரர் சன்னதிகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. காசி விஸ்வநாதர் மற்றும் அம்மன் சன்னதிகளைக் கட்டுகின்ற பணி, தொடர் நடவடிக்கையில் உள்ளது. இத்திருக்கோயிலின் திருப்பணிகள் அனைத்தும்

முடிந்து, குடமுழுக்கு நடத்திடப் பரம்பரை அறங்காவலர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கபிலர்மலை தொகுதியில், அதாவது வருங்காலத்திலே தொகுதி சீரமைப்புக்குப்பின் பரமத்தி வேலூர் தொகுதி என்று அழைக்கப்படவிருக்கின்ற பரமத்தி வேலூரிலே இருக்கின்ற காசி விஸ்வநாதர் ஆலயம். தேசிய நெடுஞ்சாலை எண் 7–ல் வலதுபுறமாக காவிரியினுடைய இடதுகரையில் அமைந்திருக்கின்ற பழமையான, தொன்மையான, பாரம்பரியமிக்க கோயிலாகும். காசியிலே இருக்கின்ற விஸ்வநாதர் ஆலயத்தைப்போல, ஈசனின் இருப்பிடமாகக் கருதப்படுகின்ற இடுகாட்டிற்கு எதிரிலே அமைந்திருக்கின்ற இந்தக் கோயில், அந்தப் பகுதி மக்கள் எல்லோராலும் வழிபடப்படுகின்ற ஒரு மத நல்லிணக்கச் சின்னமாக விளங்குகிறது. நீண்ட நாட்களாக இயற்கைச் சீற்றத்தாலும், வெள்ளத்தாலும் இடிபாடுகளுக்கு உட்பட்ட அந்த ஆலயத்திற்குச் 'சீரமைப்புப் பணி நடைபெறுகிறது, நடைபெறுகிறது' என்று அந்தப் பரம்பரை அறங்காவலர்களால் சொல்லப்படுகிறது. அவர்கள் உண்மையிலேயே கடந்தகாலத்திலே பெரிய புரவலர்களாக இருந்தவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: ஆனால், இப்போது அவர்களால் சீரமைப்புப் பணி நடைபெறுவதில் காலதாமதம் ஆகிறது. அதனை விரைவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதற்கு அரசு நிதியுதவியினை அளித்திட முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆலயம் பரம்பரை அறங்காவலர்களால் நடத்தப்படுகின்ற, பராமரிக்கப்படுகின்ற, நிர்வகிக்கப்படுகின்ற ஆலயம். அதிலே துறை அதிகாரிகள் அங்கே இருப்பார்கள். ஆனால், முழுமையாக நாம் ஆதிக்கம் செலுத்துவது என்பது இயலாத காரியம். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல தவறுகள் அங்கே நடைபெறுமேயானால், அவற்றைத் திருத்திக்கொள்வதற்கு, எச்சரிப்பதற்கு இந்த அரசு தயங்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2007 ஜனவரி 23]

டாக்டர் க. நெடுஞ்செழியன்: அங்கே தவறு நடக்கிறது என்பதைச் சொல்ல நான் வரவில்லை. நிதியுதவி அரசிடமிருந்து பெற ஆவன செய்யப்படுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இப்போது இங்கே கேள்வியாக வைத்திருக்கிறார் அதை மனுவாகக் கொடுத்தால், துறையின் சார்பாகவும் உதவுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் தொகுதியில் பிரசித்தி பெற்ற அருள்மிகு யோக நரசிம்மர் ஆலயமும் மற்றும் அருள்மிகு யோக ஆஞ்சநேயர் கோயிலும் உள்ளது. இக்கோயில் திருப்பணி, நீண்ட ஆண்டுகளாக செய்யப்படாமலே உள்ளது. சமீபத்தில்கூட, நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் முத்தமிழ் அறிஞர் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பைச் செய்தார்கள். விரைவில் அந்தக் கோயிலுக்கு 'ரோப் கார்' வசதி செய்து தரப்படும் என்று. இந்த நேரத்திலேயே, ஓர் உரிய சந்தர்ப்பமாக இருக்கின்ற இக்காலக்கட்டத்திலேயே அந்தத் திருப்பணியை நடத்தினால், மிகச் சிறப்பாக இருக்குமென்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்தக் குடமுழுக்கு விரைவில் தொடங்கப்படுமா, அதற்குரிய சம்பந்தப்பட்ட துறை நடவடிக்கை எடுக்குமா, அறநிலையத் துறை அமைச்சர் இதற்கு விடையளிப்பாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நீண்ட நெடுங்காலமாக, இந்த அவையிலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், தொடர்ந்து அந்தக் கோரிக்கையை வலியுறுத்தி வந்தார்கள். பிறகு, புதிய உறுப்பினராக வந்திருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு அவர்களும் அந்தக் கோரிக்கையை வைத்து, 5 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 'ரோப் கார்' அமைக்கின்ற அந்தப் பணிக்கு உத்தரவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பணி தொடங்குகின்ற நாளை, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்து, அதிகாரிகள் தேர்ந்தெடுத்து நடத்துவதற்கு, ஏற்பாடுகள் செய்வதற்குக் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்

அவர்கள் தங்களுடைய தேதியை உரிய அதிகாரிகளிடத்திலே தெரிவித்தால், அந்தப் பணி நிச்சயமாக விரைவிலே தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

17—

கைத்தறிப் பூங்கா

***12293—திரு. சபா. இராஜேந்திரன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, புதுப்பேட்டையில் கைத்தறிப் பூங்கா அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நெல்லிக்குப்பம் தொகுதி, புதுப்பேட்டையில் கைத்தறி ஜவுளிப் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசிடம் இல்லை.

திரு. சபா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது நெல்லிக்குப்பம் தொகுதியில் புதுப்பேட்டை பகுதி, கடந்த நூறாண்டுகளாக, கைத்தறித் தொழிலையே நம்பி வாழ்ந்துகொண்டிருக்கின்ற நெசவாளர்கள் வாழ்கின்ற பகுதி. 3,000 கைத்தறிகள் வரை செயல்பட்டுக்கொண்டிருந்த அந்தப் பகுதியிலே, இப்போது 200, 300 கைத்தறிகள்தான் செயல்படுகின்றன. மிக நுட்பமாக அந்தத் தொழிலைச் செய்யக்கூடிய அந்த மக்கள் வேறு எந்தத் தொழிலுக்கும் செல்ல முடிவதில்லை; வேலைவாய்ப்பும் பெற முடிவதில்லை. எனவே, தமிழக அரசின்மூலம் ஒரு கைத்தறிப் பூங்காவினை அங்கே அமைத்து, 3,000 கைத்தறிகளை அங்கே அமைத்துக் கொடுத்து, அதற்கான கட்டமைப்புப் பணிகளையும் செய்து கொடுத்தால், அந்தப் பகுதியிலே வாழ்கின்ற 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். மற்றும் ஏற்றுமதிக்கும்...